**Catholic Bishop's House**

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)

**Rt Rev. S. Antonysamy D.D., D.C.L.,**
**Bishop of Palayamkottai**

ஜூலை 08, 2020

கோவிட்-19 பெருந்தொற்றுச் சூழ்நிலையில் பாளையங்கோட்டை மறைமாவட்ட கத்தோலிக்க ஆலயங்களில் பொதுத் திருவழிபாடுபற்றிய தல ஆயரின் சுற்றறிக்கை.

அன்பார்ந்த சகோதர அருள் தந்தையர்களே,

ஊட்டமளிக்கும் நற்கருணை நாதரின் இனிய பெயரில் நல் வாழ்த்துக்கள்!

இவ்வாண்டு தவக்காலத்தின் இறுதி நாட்களிலிருந்து உலக நாட்டு மக்களோடு நாம் அனுபவித்துவரும் கோவிட்-19 பெருந்தொற்று பல நிலைகளில் பல்வேறு நலன்களை மக்கள் அனுபவிக்கமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது நாம் அறிந்ததே. உடல் நலன், விவசாயம், பொருளாதாரம், வேலை வாய்ப்பு, சுப காரியங்கள்,கல்வி போன்ற மக்களின் வாழ்வாதாரங்களையெல்லாம் இப்பெருந்தொற்று முடக்கியதால் நம் மத்தியில் ஏற்பட்டுள்ள அசாதாரணச் சூழ்நிலையிலிருந்து நாம் என்று மீண்டு வருவோம் என்னும் ஏக்கம் நமது உள்ளங்களில் நிரம்பியுள்ளது. நம்மைச் சுற்றி நாம் அனுபவிக்கும் மேற்கண்ட வெளிப்புற இழப்புகளையும் தாண்டி நமக்குள்ளும் ஒரு பெரிய இழப்பினை *—ஆன்மீகத்தை ஊக்கப்படுத்தும் வழிபாட்டு இழப்பினை—* ஏற்படுத்தியுள்ளது. ஆன்மீகத் தாகத்தில் இருக்கும் நமக்கு வழிபாட்டின் வழியாக இறை அருளின் ஊற்றை சிறிது சிறிதாகத் திறக்கும் காலம் விடியலைப்போன்று வந்துகொண்டிருக்கின்றது. இச்சூழலில் நமது மறைமாவட்டத்தில் நம்பிக்கையாளர்களுக்கு படிப்படியாக எவ்வாறு திருவருட்சாதனங்களையும் ஏனைய ஆன்மீக காரியங்களையும் வழங்கலாம் என்பதைக்குறித்த வழிமுறைகளை வழங்க விழைகின்றேன்.

நமது மத்திய அரசு இறை வழிபாட்டிற்கான தடையை ஜூன் எட்டாம் தேதியிலிருந்து விலக்கி அதில் பங்குபெறுவோருக்கான வழிமுறைகளைக் கொடுத்தது. ஆனால் நமது மாநிலத்தில் கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் சில இடங்களில் மிக அதிகமாக இருந்ததால் தமிழக அரசு ஜூலை ஆறாம் தேதியிலிருந்து ஊராட்சிப் பகுதிகளில் மட்டும் தளர்த்தி இறை வழிபாட்டிற்கான தடையை விலக்கத்தொடங்கியிருக்கின்றது. மேலும் இத் தடையானது வருகின்ற வாரங்களில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளிலும் விலக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.இச்சூழ்நிலையில் வழிபாட்டிற்கான தடை தளர்வுபெறும் நிலையில் நமது மறைமாவட்டத்தில் ஆலயங்களில் பொது வழிபாட்டினை எவ்வாறு எச்சரிக்கயுடன் கையாளலாம் என்பது குறித்து நமக்கு உதவி செய்ய நமது மறைமாவட்டத்தைச் சார்ந்த மூன்று மருத்துவ நிபுனர்கள் நமது பேராலய பங்குத் தந்தை வழியாக ஜூன் 13ஆம் தேதி முன்வந்து என்னைச் சந்தித்தார்கள். எனவே நமது மறைமாட்டத்தில் பாளையங்கோட்டை மறைவட்டம், அம்பாசமுத்திரம்-தென்காசி மறைவட்டங்கள், கோவில்பட்டி-சங்கரன்கோவில் மறைவட்டங்கள் என்று மூன்று நிலைகளில் இம் மருத்துவ நிபுனர்கள் நமது அருள்தந்தையர்களோடு கலந்துறையாடி பொது வழிபாட்டினை முறையாகவும் பாதுகாப்பாகவும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி ஜூன் 20ஆம் தேதி பாளையங்கோட்டை மறைவட்டத்திற்கான கலந்துறையாடல் ஆயர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொள்ள ஏனைய மறைவட்ட அதிபர்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அதன்படி மருத்துவ நிபுனர்கள் மருத்துவர் திரு பிரான்சிஸ் ராய், மருத்துவர் திருமதி நிர்மலா ஜெயக்குமார், மருத்துவர் திரு பிரகாஷ் ஆகியோர் கோவிட்-19 பெருந்தொற்றின் தன்மை, அதன் தாக்கம், அதன் தொற்று ஏற்படுத்தும் முறை, தொற்றினால் ஏற்படும் உடல் நலக்குறைவுகள் - ஆபத்துக்கள், அதிலிருந்து நம்மை பாதுாக்கும் முறை என்று பல கருத்துக்களை அறிமுகம் செய்து, விளக்கி, தெளிவுபடுத்தினார்கள். அதே நேரத்தில் அருள்தந்தையர்கள் கோவிட்-19 பெருந்தொற்றின் தெளிவுகளை நன்றாகப் புரிந்துகொண்டு மக்களுக்கு வழிகாட்டவும்,



**Palayamkottai** : Tel : **+91 462 2522042**, Mobile : **9443370160**
E-mail : bishop@palayamkottaidiocese.org; Website : www.palayamkottaidiocese.org

அவர்களையும் தங்களையும் பாதுகாத்துக்கொள்ளவும் அறிவுறுத்தினார்கள். நானும் இந்திய ஆயர் பேரவையும் மற்றும் தமிழக ஆயர் பேரவையும் பகிர்ந்துள்ள நெறிமுறைகளைக் குறித்து விளக்கினேன். ஏனைய மறைவட்டங்களுக்கான கலந்துறையாடல்கள் தமிழக அரசு மக்களின் நலனுக்காக முன்வைத்த நெறிமுறைகளால் நடத்த முடியவில்லை. இக்கலந்துறையாடல்களையும் நடத்துவதற்குறிய சாத்தியக்கூறுகள் பரிசீலனையில் உள்ளது. பாளையங்கோட்டை மறைவட்டத்திற்கான கலந்துறையாடலின் இறுதியில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நமது மறைமாவட்டத்திற்கான வழிகாட்டுதலாக இங்கு வழங்குகின்றேன்.

**தளம்:**

1. தற்சமையம் தமிழ் நாட்டில் **ஊராட்சிப்** பகுதிகளில் மட்டுமே வழிபாட்டுத் தலங்களில் பொது வழிபாட்டிற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பங்குத் தந்தையர்கள் தங்கள் பங்குகளில் எந்தெந்த ஊர்கள் ஊராட்சிகளின்கீழ் வருகின்றன என்பதை தெளிவுபடுத்தி அப்பகுதிகளில் உள்ள ஆலயங்களில் மட்டும் இந்திய, தமிழக அரசுகளின் நெறிமுறைகளுக்குட்பட்டு, மறைமாவட்டத்தின் வழிகாட்டுதல்களுக்கேற்ப வழிபாடுகளை மேற்கொள்ளவும்.
2. ஏனைய பகுதிகளில், அதாவது பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் எப்பொழுதிலிருந்து தமிழக அரசு பொது வழிபாட்டிற்கானத் தளர்வுகளை அறிவிக்கின்றதோ அந்நளிலிருந்து பொது வழிபாட்டினை நிறைவேற்றலாம்.
3. காற்றோட்டமான திறந்தவெளி வளாகமிருப்பின் அங்கு பலிபீடம் அமைத்து வழிபாடு நடத்துவது சாலச் சிறந்தது.

**ஆலயத் தயாரிப்பு:**

1. ஆலயத்தையும் அதிலிருக்கும் இருக்கைகளையும், கதவு மற்றும் கைப்பிடிகளையும் கிருமி நாசினிகொண்டு வழிபாட்டிற்கு முன்பும், ஒவ்வொரு வழிபாட்டிற்குப் பின்பும் சுத்தம் செய்யவேண்டும்.
2. ஆலய வளாகத்திற்குள் நுழையும்போது கரங்களை சுத்தம் செய்ய கிருமி நாசினியும், நீரும், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பதும் காகிதமும் வைத்திருத்தல் வேண்டும்.
    - கரங்களை சுத்தம் செய்ய மெல்லிழைத்தாளுக்குப் பதிலாக (Tissue Paper) ஆங்கில நாளிதளை முறையாக வெட்டி வைக்கலாம் என்று மருத்துவ நிபுனர்கள் பரிந்துரைத்தனர்.
3. ஆலய வாயில்களின் அருகில் வைக்கப்பட்டிருக்கும் புனித நீர் கிண்ணங்கள் வெறுமையாய் இருக்கவேண்டும்.
4. ஆலயத்திலும் பலிபீடத்திலும் அலங்காரங்கள் (இன்றியமையாதவைத் தவிர) மிக குறைவாகவே இருக்கவேண்டும். ஏனென்றால் அவைகளை ஒவ்வொரு முறையும் சுத்தப்படுத்துவது மிகக் கடினம்.
5. ஒலி வாங்கிகளின் மேல் (Microphone) அதற்கான நெகிழி உறைகளை (Plastic Cover) வைத்து மூடுவது அவசியமானது.
6. ஆலயத்தினுள்ளோ காற்றேட்டமான வளாகத்திலோ மக்கள் பாதுகாப்பான இடைவெளி விட்டு இருக்க உதவிட முறையாகக் குறியீடுகள் அமைத்திடல்வேண்டும். உட்காரும் தரையிலும் முறையாக அமைக்கப்பட்ட இருக்கைகளிலும் பச்சை சிவப்பு வண்ணக் குறியீடுகளை வரையலாம்.
    - அருகிலிருக்கும் இருவரும், முன்னும் பின்னும், வலமும் இடமும் கரங்களை நீட்ட ஒன்றுக்கொன்று தொடாத தொலைவினைக்கொண்டு அளவிடல்வேண்டும்.
7. ஆலயத்தினுள் நுழைய ஒரு வாசலும் வெளியேற வேறொரு வாசலும் என்று முறைப்படுத்திடல்வேண்டும். இரு வழிப் பாதையாக வாயில்களைப் பயன்படுத்துவது பாதுகாப்பற்றது.
8. ஆலயத்தினுள் நுழையும்போது ஒவ்வொருவரையும் தொலை வெப்பமானிகொண்டு (Remote Thermal Scaner) உடல் வெப்ப அளவீடு செய்திடல்வேண்டும்.
9. ஆலயத்தினுள் மிதியடிகள் அணிந்து வரவேண்டாம் என்னும் குறிப்பினை வாயிலுக்கு அருகில் வைத்திடல்வேண்டும்.

10. ஆலயத்தினுள் இருக்கும் சுருபங்களைத் தொட்டோ முத்திசெய்தோ பக்தியை வெளிப்படுத்தவேண்டாம் என்று அறிவிக்கலாம்; அல்லது சுருபங்களுக்கு அருகில் 'தயவுசெய்து தொட்டு முத்தி செய்யவேண்டாம்' என்னும் அறிவிப்பை வைக்கலாம்.
11. ஆலயத்தினுள்ளும், ஆலய வளாகத்திலும் கூடி நின்று உரையாடவோ நட்பு பாராட்டவோ, சிறிறுண்டி அருந்தவோ அனுமதிக்கவேண்டாம். அத்தகைய செயல் ஒருவரிடமிருந்து அருகிலிருப்பவருக்கு நோய்த் தொற்று ஏற்பட வழிவகுக்கும்.
12. மேற்கண்டவற்றை நெறிமுறைப்படுத்தவும், வழிபாடுகளில் பங்கேற்பவர்களுக்கு வழிகாட்டவும் தேவையான தன்னார்வவழிகாட்டிகளுக்கு (Ushers) பயிற்சியளித்து பயன்படுத்திடல்வேண்டும்.
    - இவர்களை பங்குப்பேரவை,பக்த சபைகள்,இளையோர் அமைப்பு போன்றவற்றின் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்துகொள்ளலாம்.

**வழிபாட்டில்பங்கேற்பு:**

1. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது பெருந்தொற்றுப் பரவலைக் வெகுவாகக் குறைக்கும் என்பதால்,ஆலயத்தின் கொள்ளவுக்கேற்ப பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையில் மக்களை அனுமதிப்பது சாலச் சிறந்தது (300 நபர்கள் பங்கேற்கும் ஆலயம் என்றால் 100 நபர்களை அனுமதிப்பது). ஆலயத்திற்கு வெளியேயும் இடமிருந்தால் அங்கும் பங்கேற்பாளர்கள் பாதுகாப்பான இடம் விட்டு இருக்கவேண்டும்.
2. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் சூழலில், வழிபாட்டின் எண்ணிக்கையை தேவைக்கேற்ப அதிகரிக்கவேண்டும்.அதே போன்று பங்கில் வெவ்வேறு பகுதிகளிலிருக்கும் சிற்றாலயங்களில் அப் பகுதியிலிருக்கும் மக்களுக்காக முன்னறிவிக்கப்பட்ட நேரத்தில் திருப்பலி நிறைவேற்றலாம்.
3. நம்பிக்கையாளர்களில் 60 வயதிற்கு மேற்பட்டோர், 10 வயதிற்கு குறைந்தோர், நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்டிர் போன்றோர் தங்கள் உடல் நலனைக் கருத்தில்கொண்டு வழிபாடுகளில் பங்கேற்கவேண்டாம் என்று அறிவுறுத்துவது நலம். முன்பின் தெரியாத வெகளியூர் ஆட்களை அனுமதியாமல் இருப்பதும் சிறந்தது.
4. ஞாயிறு கடன் திருப்பலிகளில் அதிக கூட்டம் கூடாமலிருக்க,நமது மறைமாவட்டத்தில் ஞாயிறு கடன் திருப்பலியை சனி மாலைத் திருப்பலியிலோ அல்லது ஞாயிறு திருப்பலிகளிலோ மட்டுமல்லாது, வார நாட்களின் திருப்பலிகளிலும் வசதிக்கேற்ப பூர்த்திசெய்துகொள்ளலாம் என்று அனுமதிகொடுக்கின்றேன்.
5. ஒவ்வொரு பங்கிலும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் அன்பியங்களை முறையாக வரிசைப்படுத்தியோ அல்லது வேறு வழிகளிலோ மக்களின் பங்கேற்பை நெறிப்படுத்தலாம்.
6. சிறுவர் சிறுமியருக்கான சிறப்புத் திருப்பலிகள் முற்றிலும் தவிர்க்கப்படல்வேண்டும்.
7. திருவழிபாட்டில் பங்கேற்பவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருத்தல்வேண்டும்.
8. பாடகர்கள் குழுவாக சேர்ந்திடாமல் தனியாக இருந்துகொண்டு (Cantors) வழிபாட்டில் பங்கேற்கும் அனைவரும் பாடுவதற்கு ஏதுவான நன்கு தெரிந்த பாடல்களைப் பாடவேண்டும்.
9. வார நாட்களின் திருப்பலியை ஏறக்குறைய 20 நிமிடங்களிலும், ஞாயிறு கடன் திருப்பலியை ஏறக்குறைய 45 நிமிடங்களிலும் அருள்தந்தையர்கள் நிறைவேற்றி முடிக்கவேண்டும். எனவே திருப்பலியில் எல்லா பாடல்களையும் முழுமையாகப் பாடுவதைத் தவிர்த்து, இன்றியமையாதப் பாடல்களை மட்டும் பாடுவது நலம்.
10. திருப்பலித் திருவிருந்தில் நற்கருணையை அருள்தந்தையர்கள் பரிமாறுவதற்கு முன்பு முகக்கவசம் அணிந்து முறையாகக் கரங்களைச் சுத்தம்செய்து அதன் பின் பங்கேற்பாளர்களின் இடங்களுக்குச் சென்று போதிய இடைவெளிவிட்டு கரங்களில் மட்டுமே கவனமாகக் கொடுக்கப்படவேண்டும். ஏதேர்ச்சையாக வாங்குபவரின் கரத்தை அருள்தந்தை தொட்டுவிட்டால் உடனடியாக தனது கரத்தை கிருமிநாசினிகொண்டு கழுவிடல்வேண்டும்.இரு குணங்களில் (*திருப்பொழிவு செய்ப்பட்ட அப்ப இரசக் குணங்களில்*) நற்கருணை கொடுப்பது தவிர்க்கப்படல்வேண்டும்.

11. பெரிய ஆலயங்களிலோ அல்லது காற்றோட்டமான வளாகத்திலோ திருப்பலி நடைபெற்று அதிக எண்ணிக்கையில் பங்கேற்பாளர்கள் இருப்பின் நற்கருணைத் திருவிருந்தில் உதவிசெய்ய அனுமதி பெற்றத் துறவியரை மேற்கண்ட (எண் 10) தயாரிப்போடு அனுமதிக்கலாம்.
12. ஏனைய திருவருட்சாதனங்களைப் பொருத்தமட்டில் மத்திய மாநில அரசுகளின் நெறிமுறைகளை கட்டாயம் பின்பற்றிடல்வேண்டும்.

**பங்குகளில் ஏனைய மேய்ப்புப் பணிகள்:**

1. நோயுற்றோரையும், வயது முதிர்ந்தோரையும் வழக்கம்போல அவரவர் வீடுகளில் சந்தித்து ஜெப வழிபாடு நடத்தி நற்கருணை கொடுக்க தயங்காமல் முன்வரவேண்டும். இத் தருணங்களில் அருள்தந்தையர்கள் தங்களுடைய பாதுகாப்பையும் வீட்டினரின் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு மேற்கண்டவற்றில் பொருத்தமான முன் தயாரிப்புகளைச் செய்திடல்வேண்டும்.
2. மறு அறிவிப்பு வரும்வரை பங்குகளில் திருவிழாக்களையோ, நவநாட்களையோ, எத்தகைய கொண்டாட்டங்களையோ நடத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். இத்தகைய தருணங்கள் மக்கள் மத்தியில் பெருந்தொற்று வேகமாகப் பரவ ஏதுவானதாக மாறிவிடும்.
3. வழக்கமாக பங்குகளில் நடைபெறும் பங்குப் பேரவைக் கூட்டங்கள், பக்த சபை, இளையோர் கூட்டங்கள் போன்றவற்றை தவிர்த்திடல்வேண்டும். மேற்கண்டவற்றை நெறிமுறைப்படுத்தவோ அல்லது தவிற்கமுடியாதக் காரணங்களுக்காக பங்குப் பேரவைக் கூட்டத்தை நடத்தவேண்டுமெனில் தகுந்த பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்ட பின் நடத்தவேண்டும்.

**அருள்தந்தையர்களின் உடல் நலம் பேண:**

1. கூட்டுத் திருப்பலியைத் தவிர்த்திடல்வேண்டும்.
2. ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தனித் தனியாக திருவழிபாட்டு உடைகளைப் பயன்படுத்தவேண்டும். ஒரே திருவழிபாட்டு உடையை பலரும் அணிவது பொருந்தொற்று பரவ வழிவகுக்கும்.
3. கோவிட்-19 பெருந்தொற்றைத் தடுக்க கொடுக்கப்பட்டுள்ள அனைத்து நெறிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் அருள்தந்தையர்கள் கவனமாகப் பின்பற்றி தங்கள் மேய்ப்புப்பணி கண்காணிப்பிலிருக்கும் அனைவரும் பின்பற்ற முன்மாதிரி காட்டி, கற்றுக்கொடுத்து, வழிநடத்தவேண்டும்.
4. வெளியில் சென்று வர ஒரு சில ஆடைகளை பயன்படுத்தி இருப்பிடம் வந்தவுடன் உடல் கழுவி வேறு ஆடை அணிவது உடல் நலம் பேணும் முக்கிய செயல்பாடாகும்.
5. தேவைப்படும்போது மட்டுமே வெளியில் செல்லவும். அவ்வாறு செல்லும்போது தலைமுடியை மூடும் அளவுக்காக தொப்பியை அணிந்து, கைக்கடிகாரம், ஆபரணங்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் ஒவ்வொரு முறையும் சென்று வரும்போது அவற்றை கிருமிநாசினியால் முழுமையாக சுத்தம் செய்வதென்பது இயலாததொன்று.
6. குறைந்தது 20 வினாடிகளாவது கரங்களை கிருமிநாசினிகொண்டு கழுவுவது நமக்கு நாமே தொற்று ஏற்படுத்தாமலிருக்க உதவும்.
7. எப்பொருளை வெளியிலிருந்து வாங்கி வந்தாலும் அப்பொருளை (காய் கனி உட்பட) குறைந்தது ஆறு மணி நேரம் வெளியில் வைத்ததன் பின் தேவைப்படின் நன்றாகக் கழுவி பயன்படுத்துவது பாதுகாப்பானது.
8. எளிதில் கழுவக்கூடிய மிதியடிகளைப் பயன்படுத்துவது நல்லது.
9. உடல் நலக் குறைவுக்கான அசாதாரண அறிகுறிகள் இருந்தால் தாமதம்செய்யாமல் மருத்துவ உதவி நாடுவது விவேகமானது.
10. வழக்கமாக செயல்பாடுகள் இல்லாத இக்காலத்தில் விவிலிய விளக்கம், இறையியல் மற்றும் ஆன்மீக நூல்களை வாசிப்பதும் வருங்கால மேய்ப்புப்பணிக்கான தயாரிப்பும், தனிச்செபத்திலும், நற்கருணை நாதரை தரிசிப்பதிலும் முனைப்போடு இருப்பதும் மன

அழுத்தமின்றி குருத்துவ வாழ்க்கையை சாட்சிய வாழ்க்கையாக வாழ பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

11. நாவின் விருப்பத்தைவிட உடல் நலனை மேம்படுத்தும் சத்து மிகுந்த உணவு வகைகளை உட்கொள்வது என்றும் உகந்நது.
12. உடலில் நீரிழப்பு ஏற்படாமல் இருக்க போதுமான அளவு நீர் அருந்தி, ஓய்வெடுத்து மேற்கண்டவற்றை கவனமுடன் கடைபிடித்து உங்கள் ஒட்டுமொத்த நலனைப் பேணி பாதுகாத்துக்கொள்ளுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய மாநில அரசுகளின் எதிர்கால அறிவிப்புகளின் அடிப்படையில் தேவைப்படின் நமது மறைமாவட்டத்திற்கான வழிமுறைகள் கொடுக்கப்படும். நம் அனைவரின் நலனில் அக்கறைகொண்டு தன்னார்வத்தோடு வழிகாட்டி உதவிசெய்ய முன்வந்த நமது மறைமாவட்டத்தைச்சார்ந்த மருத்துவ நிபுனர்களையும், அவர்களை அழைத்துவந்து கலந்துரையாடலுக்கு அடித்தளமிட்ட நமது பேராலயப் பங்குத்தந்தையையும் பாராட்டுகின்றேன். இத்தகைய அக்கறைகொண்ட பொதுநிலையினர் நம்மோடு இருப்பது நம்மில் ஒரு பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கின்றது. நோய் நீக்கும் நமது விண்ணக மருத்துவரான இறைமகன் இயேசு கிறிஸ்து அவர்களையும், அவர்களது குடும்பங்களையும், அவர்களது மருத்துவ சேவையையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

உங்கள் அனைவரின் உடல் உள்ள நலனுக்காக எனது செபங்களும் ஆசீரும்!

Rt. Rev. S. Antonysamy, D.D., D.C.L.
Bishop of Palayamkottai

நம் ஆண்டவரில் அர்ப்பணத்துடன்,

+ S. Antonysamy

\+ ச. அந்தோனிசாமி

பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்